(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. **77**.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2016 யூன் 10, வெள்ளிக்கிழமை மு.ப.10.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ கரு ஜயசூரிய,** சபாநாயகர்

---

**கௌரவ ரணில் விக்கிரமசிங்க,** பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்

**கௌரவ (திருமதி) தலதா அதுகோரல,** வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சர்

**கௌரவ வஜிர அபேவர்தன,** உள்நாட்டலுவல்கள் அமைச்சர்

**கௌரவ மஹிந்த அமரவீர,** கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ கயந்த கருணாதிலக்க,** பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சரும் அரசாங்கக் கட்சி முதற் கோலாசானும்

**கௌரவ ரவி கருணாநாயக்க,** நிதி அமைச்சர்

**கௌரவ அகில விராஜ் காரியவசம்,** கல்வி அமைச்சர்

**கௌரவ லக்ஷமன் கிரிஎல்ல,** உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரும் பாராளுமன்றச் சபை முதல்வரும்

**கௌரவ மனோ கணேசன்,** தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர்

**கௌரவ தயா கமகே,** ஆரம்பக் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ தயாசிறி ஜயசேகர,** விளையாட்டுத்துறை அமைச்சர்

**கௌரவ நிமல் சிறிபால த சில்வா,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்

**கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,** வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சர்

**கௌரவ ஏ. டி. சுசில் பிரேமஜயந்த,** விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்

**கௌரவ றிஸாட் பதியுதீன்,** கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா,** அனர்த்த முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ சாகல ரத்நாயக்க,** சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) விஜயதாஸ ராஜபக்ஷ,** நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சரும்

**கௌரவ சந்திம வீரக்கொடி,** பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ மலிக் சமரவிக்ரம,** அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்

**கௌரவ டி.எம். சுவாமிநாதன்,** சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ரஊப் ஹகீம்,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர்

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா,** பிரதேச அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ லக்ஷமன் யாப்பா அபேவர்தன,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரீ. பீ. ஏக்கநாயக்க,** காணி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பியங்கர ஜயரத்ன,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ நிரோஷன் பெரேரா,** தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) விஜயகலா மகேஸ்வரன்,** சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வீ.எஸ். இராதாகிருஷ்ணன்,** கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ருவன் விஜேவர்தன,** பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ திலிப் வெதஆரச்சி,** கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரவீந்திர சமரவீர,** தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சுஜீவ சேனசிங்க,** சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லக்ஷமன் செனெவிரத்ன,** விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வசந்த சேனாநாயக்க,** நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர்

**கௌரவ எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,** புனர்வாழ்வளிப்பு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஏ. எச். எம். பௌஸி,** தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லஸந்த அலகியவன்ன,** மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ அநுராத ஜயரத்ன,** மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பிரதி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,** வெளிநாட்டலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ கருணாரத்ன பரணவிதான,** பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக பிரதி அமைச்சர்

**கௌரவ தாராநாத் பஸ்நாயக்க,** தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர்

**கௌரவ இரான் விக்கிரமரத்ன,** அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ அமீர் அலி சிஹாப்தீன்,** கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர்

---

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன**

**கௌரவ சிசிர குமார அபேசேகர**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ ஆனந்த அலுத்கமகே**

**கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே**

**கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே**

**கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி**

**கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்**

**கௌரவ சந்திம கமகே**

**கௌரவ உதய பிரபாத் கம்மன்பில**

**கௌரவ நிஹால் கலப்பத்தி**

**கௌரவ தினேஷ் குணவர்தன**

**கௌரவ பந்துல குணவர்தன**

**கௌரவ எட்வட் குணசேகர**

**கௌரவ டி.வீ. சானக**

**கௌரவ சிசிர ஜயகொடி**

**கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன**

**கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன**

**கௌரவ லக்கி ஜயவர்தன**

**கௌரவ க. துரைரெட்ணசிங்கம்**

**கௌரவ எம்.எஸ். தௌபீக்**

**கௌரவ ரீ. ரன்ஜித் த சொய்சா**

**கௌரவ அநுர திசாநாயக்க**

**கௌரவ மயந்த திசாநாயக்க**

**கௌரவ விமலவீர திசாநாயக்க**

**கௌரவ வீரகுமார திசாநாயக்க**

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா**

**கௌரவ முஹமட் நவவி**

**கௌரவ புத்திக பத்திறண**

**கௌரவ அசோக்க பிரியந்த**

**கௌரவ பந்துல லால் பண்டாரிகொட**

**கௌரவ முஹம்மது இப்ராஹிம் முஹம்மது மன்சூர்**

**கௌரவ எஸ்.எம். மரிக்கார்**

**கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா**

**கௌரவ இம்ரான் மஹ்ரூப்**

**கௌரவ அப்துல்லா மஹரூப்**

**கௌரவ திலக் மாரபன**

**கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க**

**கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரன**

**கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன்**

**கௌரவ பிமல் ரத்நாயக்க**

**கௌரவ பிரசன்ன ரணதுங்க**

**கௌரவ பிரசன்ன ரணவீர**

**கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல**

**கௌரவ இஷாக் ரஹுமான்**

**கௌரவ முஜிபுர் ரஹுமான்**

**கௌரவ ஹர்ஷன ராஜகருணா**

**கௌரவ சமல் ராஜபக்ஷ**

**கௌரவ அங்கஜன் இராமநாதன்**

**கௌரவ காமினி லொக்குகே**

**கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன**

**கௌரவ ஏ.ஏ. விஜேதுங்க**

**கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன**

**கௌரவ சமிந்த விஜேசிறி**

**கௌரவ ச. வியாழேந்திரன்**

**கௌரவ சி. சிறீதரன்**

**கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்**

**கௌரவ (திருமதி) சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா**

**கௌரவ இராஜவரோதியம் சம்பந்தன்,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ எம்.எச்.எம். சல்மான்**

**கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்**

**கௌரவ சிவசக்தி ஆனந்தன்**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி**

**கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி**

**கௌரவ கனக ஹேரத்**

**கௌரவ விஜித ஹேரத்**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. நீல் இத்தவல, பணியாட்டொகுதிப் பிரதானியும் பாராளுமன்ற பிரதிச் செயலாளர் நாயகமும்

திருமதி குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. சபாநாயகரின் அறிவித்தல்கள்:** சபாநாயகர் பின்வரும் அறிவித்தலை விடுத்தார்,—

"கௌரவ உறுப்பினர்களே,

2016 மே மாதம் 5ஆந் திகதி விவாதத்துக்கு எடுக்கப்பட்ட ரூபா 55 மில்லியன் குறைநிரப்பு நிதி பற்றிய அன்றைய தினம் ஒழுங்குப் பத்திரத்தில் இலக்கம் 1 எனக் குறிப்பிடப்பட்ட பிரேரணை தொடர்பாக நடத்தப்பட்ட வாக்கெடுப்பின் பெறுபேறுகள் தொடர்பில் ஏற்பட்ட குளறுபடியான நிலமை குறித்து நேற்றைய தினம் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் கலந்துரையாடப்பட்டதுடன், என்னால் இது குறித்து விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட எதிர்க்கட்சித் தலைவர் கௌரவ இராஜவரோதியம் சம்பந்தன், முன்னாள் சபாநாயகர் கௌரவ சமல் ராஜபக்ஷ, நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் கௌரவ ரவூப் ஹகீம் மற்றும் நீதி அமைச்சர் மற்றும் பௌத்தசாசன அமைச்சர் கௌரவ விஜயதாஸ ராஜபக்ஷ ஆகிய சிரேஷ்ட உறுப்பினர்களை உள்ளடக்கிய குழுவின் முழுமையான அறிக்கை என்னிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின் பிரகாரம், அன்றைய தினம் பி.ப. 6.30 மணிக்கு நிச்சயிக்கப்பட்டிருந்த வாக்கெடுப்பு பி.ப. 5.45 மணிக்கு அழைக்கப்பட்டதன் பின்னர், உறுப்பினர்கள் வாக்களிப்பதற்காக, வாக்கு எண்ணப்படுகின்ற தருணத்தில் பல சந்தர்ப்பங்களில் சபைக்கு வருகை தந்தமையால் ஏற்பட்ட குழப்பமான நிலைமையில், மூன்று சந்தர்ப்பங்களில் அவ்வாறு தாமதமாகி வருகை தந்த உறுப்பினர்களது வாக்குகளை கணிப்பிடுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கின்றபோது, ஏதேனும் மானுடரீதியான தவறு அல்லது தாமதம் ஏற்படுவதற்கான வாய்ப்பு காணப்பட்டதென குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், இதன் மூலம் அச்சந்தர்ப்பத்தில் அக்கிராசனத்தில் வீற்றிருந்த உறுப்பினரின் அல்லது செயலாளர் நாயகத்தின் பக்கச்சார்ப்பின்மை அல்லது சுயாதீனம் குறித்து எந்தவிதமானதொரு சந்தேகமோ நம்பிக்கையின்மையோ ஏற்படுவதற்கு ஏதுவான எவ்விதக் காரணியும் காணப்படவில்லை எனவும், விசாரணைக் குழு வலியுறுத்தியுள்ளது.

மேலும், விசாரணைக் குழுவினால் பின்வரும் விடயங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன:

**" General Observation**

The Committee is of the view that during the last few months the conduct of some Members had been unruly, aggressive and hostile. If there will be a continuation of this kind of conduct, there will be an erosion of public confidence reposed in the Parliament and the democratic system of governance. Such a situation might eventually eat into the vitals of the democratic principles and norms. Hence the Committee recommends that stringent measures should be taken to uphold the discipline and to maintain the decorum of the Parliament.

**Recommendations**

i. The Committee recommends that this is a noteworthy matter to be resolved, by a discussion at the Party Leaders' Meeting in the interests of the Parliamentary system. If no consensus is arrived at, in considering circumstances under which the uncertainty has arisen, we recommend to hold a fresh counting of vote. (Noted a fresh vote was held.)

ii. When a Bill or a Resolution is presented to the Parliament, the Minister in charge of the subject concerned (including the officials) shall act in due diligence and appraise the House with clarity the nature and the purpose of the Bill or Resolution.

iii. The ringing of Division Bell to indicate the voting of Members must be continued for five minutes.

iv. When voting had been fixed at a particular time, the House shall not commence voting before the fixed time even if the Debate is concluded. The House may be adjourned till the time fixed for voting.

v. At the time of voting, in the absence of the Speaker, the Deputy Speaker shall preside and conduct the voting in the House.

vi. Members of the Speaker's Panel shall be given a special training to develop their skills.

vii. Officials of the Parliament shall not engage with the Members or any outsider to evaluate or examine the conduct in the House or any other related matter unless there shall be a direction from the Speaker.

viii. Stringent measures should be taken to uphold the discipline and to maintain the decorum of the Parliament.

ix. The existing Standing Orders may be revised appropriately to meet the above-mentioned requirement"

இச்சம்பவம் தொடர்பாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தனது மனவருத்தத்தை என்னிடம் எழுத்து மூலமாக தெரிவித்துள்ளார் என்பதை அறிவிக்க விரும்புகின்றேன்.

மேலும், நேற்று கூடிய பாரளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் ஒன்றிணைந்த எதிர்க்கட்டசியின் உறுப்பினர்களால் கையொப்பமிடப்பட்ட, செயலாளர் நாயகத்திற்கு எதிரான குற்றப் பிரேரணை பற்றியும் கலந்துரையாடப்பட்டதோடு, அத்தகைய குற்றப் பிரேரணையொன்றை கொண்டுவருவதற்கான எத்தகைய காரணியும் காணப்படவில்லை என்பதும் பாரளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவின் கருத்தாக இருந்தது. மேலும், இத்தகைய சம்பவங்கள் எமது பாராளுமன்றத்திலும், உலகின் ஏனைய பாராளுமன்றங்களிலும் இடம்பெற்றுள்ள பல சந்தர்ப்பங்களைப் பற்றி அறிய வந்துள்ளது. தற்போது ஹன்சார்ட் அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் எமது பாராளுமன்றத்தில் மூன்று சந்தர்ப்பங்களில் இத்தகைய தவறுகள் பின்னர் திருத்தப்பட்டுள்ளன. பிரித்தானிய பாராளுமன்றத்தில் 11 சந்தர்ப்பங்களில் வாக்கெடுப்பின்போது ஏற்பட்டுள்ள தவறுகள் மற்றும் குறைபாடுகள் திருத்தப்பட்டுள்ளன. ஆகையால் இத்தகைய சம்பவமொன்று உலக பாராளுமன்றமொன்றில் இடம்பெற்ற முதல் சந்தர்ப்பமாகும் என எடுத்துக்காட்ட சில உறுப்பினர்கள் மேற்கொள்கின்ற முயற்சியை நான் நிராகரிக்கின்றேன்.

அதேபோன்று, மேற்படி சம்பவம் இடம்பெற்ற போது கௌரவ சிசிர ஜயகொடி மற்றும் கௌரவ விமல் வீரவன்ச தங்களது செயற்பாடுகள் சம்பந்தமாகவும் மனவருத்தத்தை என்னிடம் தெரிவித்துள்ளனர் என்பதையும் அறிவிக்க விரும்புகின்றேன்.

எவ்வாறாயினும், பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு இடம்பெறும்போது அதற்கு அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களினதும் ஒத்துழைப்பு அத்தியாவசியமானது என்பதை வலியுறுத்துகின்ற அதே வேளை, செயலாளர் நாயகர் குழாமும் மிகக் கவனத்துடன் அக்கிராசனத்தின் ஒத்துழைப்புடன் வாக்குகளை கணிப்பிடும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் வலியுறுத்துகின்றேன். "

**2. பத்திரங்கள் சமர்ப்பணம்:** (1) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2016 ஆம் ஆண்டுக்கான நிதி ஆணைக்குழுவின் இலங்கை அரசியலமைப்பின் உறுப்புரை 154 ஆர் (4) பிரகாரம் மேதகு ஜனாதிபதி அவர்களுக்குச் சமர்ப்பிக்கும் பரிந்துரைகளைச் சமர்ப்பிக்கின்றேன்.

மேற்படிப் பத்திரம் ***சபாபீடத்திலடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2015 ஆம் ஆண்டுக்கான தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்பித்து மேற்படி அறிக்கையை பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர், 2015 ஆம் ஆண்டுக்கான போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் நிறைவேற்று அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கை போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2012 ஆம் ஆண்டுக்கான வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கை போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) உள்நாட்டலுவல்கள் அமைச்சர், 2015 ஆம் ஆண்டுக்கான பொலன்னறுவை மாவட்டச் செயலகத்தின் வருடாந்த செயற்றிறன் அறிக்கைகளும் கணக்குகளையும் சமர்ப்பித்து மேற்படி அறிக்கை உள்நாட்டு நிருவாகம் மற்றும் அரச முகாமைத்துவம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2013 ஆம் ஆண்டுக்கான அணுசக்தி அதிகாரசபையின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கை வலுச்சக்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(7) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன அமைச்சர், 2014 ஆம், 2015 ஆம் ஆண்டுக்களுக்கான இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கைகளைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கைகள் சர்வதேச உறவுகள் பற்றிய மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. மனுக்கள்:**

(1) (i) வந்துரம்ப, நாத்தவெல, மினுவன்தெனியவில் வதியும் திரு. ஏ.ஜி. சோமரத்னவினது 2015.12.12 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) காலி, கலேகான, மாகாணசபை சுதேச வைத்திய உதான கருத்திட்டத்தில் பணி புரியும் டாக்டர் எம்.டி. அசங்க ரங்ஜனவினது 2016.03.21 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iii) காலி, அங்கொக்காவலவில் வதியும் திரு. ஜீ. தர்மதாச மதோகல கனத்தவினது 2016.03.27 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iv) ஹிக்கடுவ, வெல்லவத்த, இல. 16 இல் வதியும் திரு. ஜி.டப்ளியூ.பி. சந்திரவங்சவினது 2015.09.27 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(v) அஹங்கம, கதலுவ, கினிவெல்லவில் வதியும் திருமதி எச்.ஜி. சந்திரபாலவினது 2015.12.01 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(vi) பத்தேகம, பிடவிடகொட, ஹிக்கடுவ, நயாபாமுல நுழைவு வழி எனும் முகவரியில் வதியும் திரு. கே..எம்.ஜி. நிமல் கருணாதிலகவினது 2015.08.07 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(vii) பூஸ்ஸ, மஹனேகொட, ஹதனகொடவத்த, "அபிதிசானி" இல் வதியும் திரு. எம். டீமன் த சில்வாவினது 2015.10.14 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(viii)பலபிட்டிய, வெலிகடமுல்லவில் வதியும் திரு. எம்.எம்.கே.சீ. ஜயவிலாலினது 2015.09.22 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ix) இரத்மலானை, அத்திடிய வீதி, செத்சிரி மாவத்தை, இல. 34 பீ யில் வதியும் திரு. எம்.ரீ.எம். நிஸாரினது 2016.02.24 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(x) காலி, கராபிட்டிய, சனிசைட் காட்ன்ஸ், இல. 247/45 இல் வதியும் திரு. பி.ஜே. ரூபசிங்கவினது 2015.09.24 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(xi) படபொல, கஹடபிட்டிய, யோகாஷ்ரமய வீதியில் வதியும் திருமதி பி.எஸ். ருக்மனீ டயஸினது 2015.09.27 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(xii)`தம்புத்தேகம, இல. 352, தேக்கவத்த, "அமா சுவ அரண" தியான நிலையத்தில் வதியும் வண. ரீ. சத்தம்மசாலா தெரனியவினது 2016.02.29 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(xiii) கிங்தொட்ட, தடல்ல, போகஹவத்த, இல. 70/9/1 இல் வதியும் திரு. டப்ளியூ. செல்டனினது 2016.03.21 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ வஜிர அபேவர்தன சமர்ப்பித்தார்.

(2) ஏறாவூர் 03, ஜெயான்ஹரி, ரியாஸ் வெதுப்பக வீதியில் வதியும் திருமதி கொல்சம் பீவீ மர்சூக்கினது 2015.10.05 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா சமர்ப்பித்தார்.

(3) (i) கிரிந்திவெல, மில்லத்தே, கிரிவெலேவத்த இல. 116/எஃப் இல் வதியும் திரு. பீ.ஜி.டப்ளியூ. ஜயசிங்கவினது 2016.02.07 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) கண்டி, அம்பிட்டிய, பள்ளேகம, இல. 48/3 ஏ யில் வதியும் திரு. பீ.ஐ.ஜீ. சம்பத் ஜயவர்தனவினது 2016.02.18 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iii) மல்வானை, களுகொந்தயாவ, இல. 76 இல் வதியும் திரு. எஸ்.ஏ, குமாரசிங்கவினது 2016.03.07 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iv) கிரிந்திவெல, போகஹவத்த, ஹத்பெரும, இல. 200/A/1 இல் வதியும் திரு. டப்ளியூ.எம். கருணாசேனவினது 2016.02.23 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(v) வேயன்கொட, மகலேகொட, இல. 194/35 இல் வதியும் திரு. டப்ளியூ.பி. சஹன் பதிராஜவினது 2016.02.26 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

கௌரவ ஹர்சன ராஜகருணா சமர்ப்பித்தார்.

25அ ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய மேற்படி மனுக்கள் பொது மனுக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**4. நிதி முகாமைத்துவம் (பொறுப்பு) (திருத்தம்):** நிதி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, நிதி முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

சட்டமூலம் 2016 யூன் மாதம் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரண்டாவது முறையாக மதிப்பீடு செய்யப்பட வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் கட்டளையாயயிற்று.

**5. பாராளுமன்ற அமர்வு**: பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— 2016.03.08 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைகளின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 10.30 மணி முதல் 12.30 மணி வரையும் மற்றும் பி.ப. 1.30 மணி முதல் பி.ப. 6.30 மணி வரையும் இருக்குமாக. மு.ப. 11.30 மணிக்கு 7(5) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளை தொழிற்படுமாக. பி.ப. 6.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**6. சட்டமூலம் கொண்டுவர அனுமதி:** "அமீர் அலி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்" எனும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக என கௌரவ முஹமட் நவவி பிரேரித்தார். கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் முதலாவது முறையாக மதிப்பிடப்பெற்று அச்சிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

47(5) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய அறிக்கையிடுவதற்காக சட்டமூலம் சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சரின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**7. சட்டமூலம் கொண்டுவர அனுமதி:** "இலங்கை சிறுவர் அபிவிருத்தி சங்கதைக் (SLACD) கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்" எனும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக என கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன பிரேரித்தார். கௌரவ முஹமட் நவவி அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் முதலாவது முறையாக மதிப்பிடப்பெற்று அச்சிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

47(5) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய அறிக்கையிடுவதற்காக சட்டமூலம் சுகாதாரம், போஷாக்கு மற்றும் உள்நாட்டு மருத்துவ அமைச்சரின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**8. ஒத்திவைப்பு (வடக்கு, கிழக்கில் இராணுவத்தினர் வசமுள்ள பொதுமக்களின் காணிகளை விடுவித்தல் மற்றும் இடம்பெயர்ந்தோருக்கான ஒழுங்கமைந்த நிகழ்ச்சித்திட்டம்) :** "இப் பாராளுமன்றம் இப்போது ஒத்திவைக்கப்படுமாக" என பாராளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

"கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி தலைமை தாங்குவாராக" என சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 1.20 மணிக்கு கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி தலைமை தாங்கினார்.)

"கௌரவ லக்கி ஜயவர்தன தலைமை தாங்குவாராக" என உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப.2.14 மணிக்கு கௌரவ லக்கி ஜயவர்தன தலைமை தாங்கினார்.)

"கௌரவ எட்வட் குணசேகர தலைமை தாங்குவாராக" என உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 3.00 மணிக்கு கௌரவ எட்வட் குணசேகர தலைமை தாங்கினார்.)

"கௌரவ பிமல் ரத்நாயக்க தலைமை தாங்குவாராக" என சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 4.16 மணிக்கு கௌரவ பிமல் ரத்நாயக்க தலைமை தாங்கினார்.)

"கௌரவ எட்வட் குணசேகர தலைமை தாங்குவாராக" என கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா பிரேரித்தார். கௌரவ இராஜவரோதியம் சம்பந்தன் அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 5.32 மணிக்கு கௌரவ எட்வட் குணசேகர தலைமை தாங்கினார்.)

அவ்வேளை நேரம் பி.ப. 6.30 மணிக்கு மேலாகிவிடவே பி.ப. 6.53 மணிக்கு, தலைமைதாங்கும் உறுப்பினர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைத்தார்.

அதன்படி, பாராளுமன்றம் 2016 யூன் மாதம் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 1.00 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

.